புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# புறநானூற்றுப் பாடல்கள் காட்டும் புலவர் பண்பாடு

முனைவர் ரா நாகேந்திரன்
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
அருப்புக்கோட்டை-626134, தமிழ்நாடு, இந்தியா

## முன்னுரை

சங்க இலக்கியங்கள் என்பவை அக்கால வரலாற்றையும், மக்களின் நாகரீகம், பண்பாடு முதலானவைகளை வெளிகாட்டுபவையாக அமைகின்றன. பல்வேறு புலவர்கள் தங்களின் வாழ்க்கையோடு பிண்ணிப்பிணைந்த அரசியல், சமூகம் போன்றவைகளை பாடல்கள் வழியாகப் பதிவு செய்யப்பட்டதை இவ்விலக்கியங்கள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. குறிப்பாக புறநானூறு, அகநானூறு முதலான எட்டுத்தொகை நூல்களும் முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை முதலான பத்துப்பாட்டு நூல்களும் அக்காலப் பண்பாட்டினையும் மட்டுமல்லாமல், போரின் நிலைகள், கல்வியின் நிலைகள் முதலானவைகளையும் அவைகள் எடுத்துக்காட்டியுள்ளன. வரலாற்றுக் கருவூலமாகக் கருதப்படுகின்ற 'புறநானூறு' என்னும் நூல் சேர, சோழ, பாண்டிய, குறுநில மன்னர்கள் வள்ளல்கள் போன்றோரின் வாழ்வியலைப் பதிவு செய்ததோடு மட்டுமல்லாமல், அவர்களைப் பாடிய பல்வேறு புலவர்களின் வாழ்வியல் சார்ந்த பண்பாட்டினையும் பதிவு செய்துள்ளது. நக்கீரர், பரணர், ஔவையார், கோவூர்கிழார், பிசராந்தையார், பொத்தியார் என புலவர்களின் பதிவுகளாகப் புறநானூறு என்னும் நூல் அமைந்துள்ளது. அந்த வகையில் புறநானூற்றில் காணப்படுகின்ற குறிப்பிட்ட பாடல்களைக் கொண்டு புறநானூற்றுப் பாடல்கள் காட்டும் புலவர் பண்பாடு என்னும் தலைப்பில் இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

## பண்பாடு என்தன் பொருள்

பண்பாடு என்பது 'பண்படுதல்' என்னும் சொல்லின் வினையடியாகப் பிறந்தது என்பர். பண்படுதல், ஒன்றுபடுதல், இசைவு பெறுதல், இசைந்து ஒழுகுதல் போன்ற பொருளைக் குறிக்கின்றது. மனிதன் பண்படுதலேயே பண்பாடு என்பது குறிக்கின்றது. ஒரு முறையான நடத்தை முறைக்கு மக்கள் ஏற்படுத்திக்கொள்ளும் ஓர்அமைப்பு அல்லது மன ஒழுங்கு முறை பண்பாட்டினைக் குறிக்கின்றது.

பண்பாடு என்பதற்கு,

"பெரும்பாலும் சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ளப்பாங்கின் வெளிப்பாட்டையே பண்பாடு என்கின்றோம். அந்த வெளிப்பாடு சுவையுணர்வாகவும் ,நடையுடை பாவனைகளாகவும் தோன்றும். அப்பண்பாடில்லாதவனைக் காட்டுமிராண்டி என்கிறோம். வாழ்வின் பல பல போக்குகள் அமைந்த பல்வேறு நிலைகளையும் இந்த பண்பாடென்பது குறிக்கும். உடலைப் பற்றிய நன்னிலை மனத்தைப் பற்றிய தூய்மை நிலை பேச்சின் இனிமை இவையெல்லாம் பண்பாட்டில் அடங்கும்"

என்று தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் தம்முடைய நூலில் குறிப்பிடுகின்றார். 1

மேற்கண்ட செய்தியின் அடிப்படையில் மக்களின் அக்காலத்திய பண்பாட்டினை அறிந்து கொள்ள முடிகின்றது.

*புலவர்களின் மனப்பாண்மை*

*அக்காலப் புலவர்கள் வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்தவர்களாக அறியப்படுகின்றனர். பாண்டிய நாட்டில் வாழ்ந்த புலவர்கள், சோழ நாட்டில் இருந்த அரசர்களைப் பாடியுள்ளனர். சோழ நாட்டில் இருந்த புலவர்கள் பாண்டிய நாட்டில் இருந்த மன்னர்களைப் பாடியுள்ளனர். இவற்றைப் பற்றிய பதிவுகள் புறநானூற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளன.*

*சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும், வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியும் போரிட்டு இறந்தபிறகு அவர்களைக் கண்டு கழாத்தலையாரும், பரணரும் பாடியுள்ளனர்*

*'அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்*
*தாம் மாய்ந்தனரே குடை துளங்கினவே*
*உரைசால் சிறப்பின் முரசு ஒழிந்தனவே'*

*( புறம். 62 7-9 வரிகள் )*

*மேற்கண்ட பாடலின் மு{லம் 'போரில் இறந்த வீரர்களின் மனைவிமார், பசுமையான கீரைக்கறியை உண்டு குளிர்ந்த நீரில் மு{ழ்கும் கைம்மை நோன்பை விரும்பாதவராய் தம் கணவரைத் தழுவி உடன் இறந்தனர்' என்னும் செய்தி பெறப்படுகின்றது.*

*'போரினால் அனைத்துப்படைகளும் அழிந்தன. போரினில் ஈடுபட்ட மன்னர்களும் இறந்தனர். இந்நாடுகள் இனி என்னவாகுமோ ?' என்னும் கருத்தமைந்த பாடலாக*

*'என்னா வதுகொல் தானே கழனி*
*யாணர் அறாஅ வைப்பின்*
*காமர் கிடக்கைஅவர் அகன்றலை நாடே ?'*

*(புறம். 63 11-15 வரிகள்)*

*மேற்கண்ட பாடல் அமைந்துள்ளது.*

*புலவர்களின் தன்மானவுணர்வு*

*பாரி மகளிரை மணந்து கொள்ளுமாறு கபிலர் இருங்கோவேளிடம் வேண்டிய போது அவன் இகழ்ந்தான். அப்போது இருங்கோவேளின் முன்னோருள் ஒருவன் கழாத்தலையார் என்பவரை இகழ்ந்ததைக் கூறி, அவர்கள் இருந்த நகரங்கள் அழிந்ததைக் குறிப்பிடும் பாடலாகக் கபிலர் பாடல் அமைந்துள்ளது.*

*'நும்போல் அறிவின் நுமருள் ஒருவன்*
*புகழ்ந்த செய்யுள் கழாஅத் தலையை*
*இகழந்ததன் பயனே'*

*(புறம். 202 11-13 வரிகள் )*

*வெளிமான் என்பவனிடம் பரிசில் பெறச் சென்ற பெருஞ்சித்தரனாருக்கு, குறைவான பொருள் கிடைத்த போது வருந்தி, குமண மன்னனிடம் சென்ற அப்புலவர் யானையைப் பெற்று, இளவெளிமானின் சிறுமையினைத் தம் பாடல் வழி வெளிப்படுத்தினார். அத்தகைய பாடலாக,*

*'இரவலர் புரவலை நீயும் அல்லை*
*புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்*
*இரவலர் உண்மையும் காண்இனி இரவலர்க்கு*
*கடுமான் தோன்றல் செல்வல் யானே'*

*(புறம்.162)*

*என்னும்பாடல் அமைந்துள்ளது.*

*பெண் கொலை புரிந்த நன்னன் மரபில் வந்த ஒருவரை பாடுவதில்லை என்பதன் அடிப்படையில் தாமப்பல்கண்ணாரின் பாடலாக*

*'நன்னன் மருக னன்றியும் நீயும்*
*முயங்கற் கொத்தனை மன்னே வயங்குமொழிப்*
*பாடுநர்க் கடைத்த கதவின் ஆடுமழை*
*அணங்குசால் அடுக்கம் பொழியும்நும்*
*மணங்கமழ் மால்வரை வரைந்தனர் எமரே' (புறம். 151)*

*என்ற பாடல் இங்கு சிறப்பிடம் பெறுகின்றது.*

*தவறுகளைத் திருத்தியமை*

*அரசர்களிடம் பரிசு பெற்ற புலவர்கள் அவர்களைப் புகழ்ந்ததோடு மட்டுமல்லாமல், அவர்கள் தவறிழைத்த போது அதனைத் தடுத்து நிறுத்தினர். குறிப்பாகப் புறநானூற்றுப் பாடல்களில் குறிப்புகள் உண்டு. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் மலையமான் திருமுடிக்கா ரியின் குழந்தைகளை யானைக் காலிட்டுக் கொல்ல முயன்ற போது கோவூர்கிழார் என்னும் புலவர் தடுத்து நிறுத்தினார்.*

*'நீயே புறவின் அல்லல் அன்றியும் பிறவும்*
*இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை*
*இவரே புலனுழுது உண்மார் தண்ணிழல் வாழ்நர்*
*கேட்டனை யாயின்நீ வேட்டது செய்ம்மே'*
*( புறம்.46)*

*என்று கிள்ளி வளவனிடம் 'நீ புறா அடைந்த துன்பம் மட்டுமல்லாமல் மற்ற உயிரினங்களின் துன்பத்தையும் களைந்த சிபியின் வழித்தோன்றல். ஆனால் இவர்களோ தம்மிடத்து உள்ளவற்றைப் பகிர்ந்து உண்ணும் இரக்க குணமுள்ளவர்களின் மரபில் வந்தவர்களாவர். அதனால் இவர்களை விட்டுவாயாக!' எனப் பாடுவதாக அமைந்துள்ளது.*

*அதனைப் போலவே இளந்தத்தன் என்பவரை ஒற்றன் என எண்ணி நெடுங்கிள்ளி கொல்லத் துணிந்த போது,*

*'வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்*
*பெற்றது மகிழ்ந்தும் சுற்றம் அருந்தி*
*ஓம்பாது உண்டு கூம்பாது வீசி*
*வரிசைக்கு வருந்தும்இப் பரிசில் வாழ்க்கை*
*பிறர்க்குத் தீதறிந் தன்றோ? இன்றே திறப்பட'*
*(புறம்.47)*

*என்றபடியாகத் தடுத்து நிறுத்துகின்றார். இவ்வாறாகத் மன்னர்கள் தவறிழைக்கும் போது அதனைத் தடுத்தும் நிறுத்தும் செயல்பாடுகளில் புலவர்கள் ஈடுபட்டுள்ளனர்.*

*இதனைப் பற்றி அ.தட்ஷிணாமு{ர்த்தி தம்முடைய நூலில்,*

*'மன்னர்கள் தவறாக நடந்தபோதும், செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யத் தவறிய போதும் அறநெறிகளை எடுத்துக் கூறி அரசியல் சிறந்து விளங்க உதவிய அறிஞர்கள் சங்கப் புலவர்கள் என்பதற்கு எத்துணையோ சான்றுகள் உண்டு'2 பக். 195*

*என்று குறிப்பிடுகின்றார்.*

*அதே போன்று மா. இராசமாணிக்கனார் என்பவரும் தம்முடைய நூலில்*

*'புலவர்கள் பிழை கண்டவிடத்து அதனை எடுத்துக் கூறி அவ்வப்போது அரசர்களைத் திருத்தி வந்தனர். குடிகளை வருத்தி வரி வாங்குதல் கூடாது. நீர் தேங்கியுள்ள சிறிய குட்டையைப் பெரிய குளமாக மாற்ற வேண்டும் என்பன் போன்ற அறிவுரைகளைப் பிசிராந்தையார் மாங்குடிமருதனார் முதலிய புலவர் பெருமக்கள் சமயம் வாய்ந்தபோதெல்லாம் அறிவுறுத்தி வந்தனர். தமிழ் மன்னரும் அவ்வறிவுரைகளுக்குச் செவி சாய்த்தனர்' 3 என்று குறிப்பிடுகின்றார்.*

*மேற்கண்ட செய்திகளின் அடிப்படையில் மன்னர்களின் செயல்பாடுகளில் புலவர்கள் சிறப்பிடம் பெற்றிருந்தனர் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.*

*உணவும் நீரும்*

*ஒரு நாட்டிற்கு நீரும், உணவும் தேவையானவை ஆகும். அத்தகைய நீரினையும், உணவினையும் இன்றியமையாப் பொருளாகக் கொண்டு குடபுலவியனார் என்னும் புலவர்,*

*'நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்*
*உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே*
*உண்டி முதற்றே உணவின் பிண்டம்*
*உணவெனப் படுவது நிலத்தொடு நீரே*
*நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு*
*உடம்பும் உயிரும் படைத்திசி னோரே'*
*(புறம்.18)*

*என்ற பாடலாக பாண்டியன் நெடுஞ்செழியனிடம் அறிவுறுத்துகின்றார்.*

'பிறர் பழியையே எப்பொதும் கூறும் சிறுமதியாளரிடம் எச்சரிக்கையாக இருக்க' அறிவுறுத்தும் பாடலாக ஊன்பொதி பசுங்குடையார்,

'வழிபடு வோரை வல்லறி தீயே
பிறர்பழி கூறுவோர் மொழி தேறலையே
நீமெய் கண்ட தீமை காணின்
ஒப்ப நாடி அத்தக வொறுத்தி'

(புறம்.10)

என்று 'உன்னை வழிபடுவோரை நீ விரைவில் அறிவாய். பிறர் மீது குற்றம் கூறுவோர் சொல்லை நீ ஏற்றுக் கொள்ள மாட்டாய். ஒருவன் செய்தது தவறு என்று நீ அறிந்தால் தகுந்த முறையில் அவனைத் தண்டிப்பாய்' 4

என்று குறிப்பிடுகின்றார்.

சேரமான் ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறைக்கு நரிவெரு{உத்தலையயார் என்னும் புலவர் 'நாட்டினைக் குழவி கொள்பவர் போலக் காக்க வேண்டும்' என அறிவுறுத்தும் பாடலாக,

'அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரயம் கொள்பவரோ டொன்றாது காவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி
அளிதோ தானேயது பெறலருங் குரைத்தே'

(புறம்.5)

மேற்கண்ட பாடலின் மு{லம் வலியுறுத்துகின்றார்.

சங்க கால நட்புகள்

சங்க காலத்தில் புலவர்கள் மன்னர்களிடையே சிறப்பான நட்பு இருந்ததைப் புறநானூற்றுப் பாடல்களால் அறிகின்றோம். அதியமான்-ஔவையார் நட்பு, கபிலர்-பாரி நட்பு, கோப்பெருங்சோழன்-பிசிராந்தையார் நட்பு அதனைப் போலவே கோப்பெருஞ்சோழன்-பொத்தியார் நட்பு இவ்வாறாக பல்வேறு நட்பு நிலைகளைக் குறிப்பிடலாம். இங்கு கோப்பெருஞ்சோழன் என்னும் மன்னவனை அறிந்து அவனைக் காணாது நட்பு கொண்ட பிசிராந்தையாரின் நட்பு நிலையினை அறிகின்றோம்.

கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையரினைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது 'தென்திசையிலுள்ள பிசிர் என்னும் ஊரிலுள்ள என் நண்பன் எப்பொழுதும் என்னையே நினைத்து இருப்பான். ஆவன் நான் மகிழ்ச்சியுடன் இருந்த காலத்தில் வராவிட்டாலும் துன்புறுகின்ற காலத்தில் தவறாமல் வருவான்' என்றும் கருத்தமைந்த பாடலாக

'கவைக்கதிர் வரகின் அவைப்புறு வாக்கல்
தாதெரு மறுகில் போதொடு பொதுளிய
வேளை வெண்பூ வெண்தயிர் கொளீஇ
பிசிரோன் என்பான் உயிர்ஓம் புநனே
செல்வக் காலை நிற்பினும்
அல்லற் காலை நில்லலன் மன்னே'

( புறம். 215 )

என்னும் பாடல் சிறப்பாக அமைகின்றது.

கோப்பெருஞ்சோழனிடம் பொத்தியார் என்னும் புலவர் 'நீ குறிப்பிடும் பிசிராந்தையார் என்னும் புலவர் உன்னைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறார். ஆயினும் உன்னைப் பார்த்ததில்லையே! அதோடு உனக்கு ஏற்பட்ட துயரினை அறிந்து எவ்வாறு இங்கு வருவார்?' 5

என்று கேட்கும் பொழுது

'தன்பெயர் கிளக்கும் காலை என்பெயர்
'பேதைச் சோழன்' என்னும் சிறந்த
காதற் கிழமையும் உடையன் அதன்தலை
இன்னதோர் காலை நில்லலன்
இன்னே வருகுவன் ஒழிக்கஅவற்கு இடமே'

(புறம். 216)

என்னும் பாடலின் மு{லம் 'தன் பெயரை அவன் பிறரிடம் கூறும் பொழுது அவன் என் பெயரையே தன் பெயராகக் கூறுவான். அத்தகைய சிறப்புடையவன் நான் இங்கு துயருற்றதை அறிந்து வருவான். எனவே அவனுக்கும் என் இடத்திற்கு அருகாமையில் இடத்தினை ஒதுக்கி வையுங்கள்!'6 என்று கோப்பெருஞ்சோழன் குறிப்பிடுகின்றார். தன் மக்களின் குணங்களினால் கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர் துறக்கிறான். அதனையிறிந்து பிசிராந்தையாரும் உயிர் துறக்கின்றார். பொத்தியார் என்னும் புலவரும் கோப்பெருஞ்சொழனின் பிரிவை எண்ணி,

'புகழ்சால் புதல்வன் பிறந்தபின் வாவென
என்னிவ ணொழிந்த அன்பி வாள
எண்ணிய திருக்குவை யல்லை
என்னிடம் யாதுமற் றிசைவெய் யோயே'
(புறம். 222)

என்னும் பாடலின் மு{லம் 'புகழ் அமைந்த பிள்ளையைப் பெற்ற பின் வா எனச் சொல்லி என்னை முன்னர் போக்கயவனே நீ அன்பு அற்றவன் போலக் கூறினாலும் உனக்கும் எனக்கும் உள்ள அன்பை எண்ணாதிருக்கமாட்டாய். புகழை விரும்புவனெ நீ எனக்குக் குறித்த இடத்தைச் செல்லுவாயாக!'7 என்ற செய்தியை அறிந்து கொள்ள முடிகின்றது.

நிலைத்த உலகமும் கல்வியும்

கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்ற மன்னன்

'தமக்கென முயலா நோன்தாள் பிறர்க்கென் முயலுநர்' என்று பாடியுள்ளான்.

'இந்திரனின் அமிழ்தமே கிடைத்தாலும் தனியாக உண்ண மாட்டார்கள். யாரையும் வெறுக்க மாட்டார்கள். புகழ் என்றால் தமது உயிரையும் கொடுப்பார்கள். பழி வரும் என்றால் உலகமே கிடைத்தாலும் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இத்தகைய குணம் கொண்டவர்கள் இருப்பதனால் தான் இவ்வுலகம் நிலைபெற்று இயங்கிக் கொண்டிருக்கிறது' என்னும் கருத்தினைக் கொண்ட பாடலாக

'உண்டால் அம்ம இவ்வுலகம் ! இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே
தமக்கென முயலா நோன்தான்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே'
( புறம். 182 )

என்னும் பாடலாக அமைந்துள்ளது.

மேற்கண்ட பாடலைப் பாடியவன் இளம்பெருவழுதி என்னும் பாண்டிய மன்னன் ஆவான். போரின் பொருட்டு கடற்படையொடு செல்லும் பொழுது கடலில் மு{ழ்கி இறந்தான். எனவே அவன் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என அழைக்கப்பட்டான்.

பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் என்னும் மன்னன் கல்வியின் சிறப்பை எடுத்துக் காட்டும் பாடலாக,

'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே
ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும்
மு{த்தோன் வருக என்னாது! அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்'
(புறம்.183 )

இப்பாடல் அமைந்துள்ளது.

'வேற்றுமை தெரிந்த நாற்பால உள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன் கண் படுமே'
(புறம்.183 )

என்னும் வரிகள் அக்கால வருணப் பாகுபாடு தோன்றிய நிலையை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது. சங்க காலம் மக்களிடையே பல்வேறு பிரிவுகள் இல்லாத காலம் என்று பல்வேறு

ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அதே வேளையில் மேற்கண்ட பாடலின் மு{லம் வருணாசிரம முறை தோன்றியதை அறிந்து கொள்ள முடிகின்றது.

இப் பாடலின் கருத்தினைப் பற்றி பெ.மாதையன் அவர்கள் தம்முடைய நூலில்

'ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனின் பாட்டு ஆசிரியர்க்கு உதவிகள் செய்தும் பொருள் கொடுத்தும் கல்வி கற்ற மரபு இருந்ததை எடுத்துரைக்கின்றது. இந்தக் கல்வி படைக்கலக் கல்வியாக அன்றி அரசியல் சார்ந்த கல்வியாக இருந்ததை 'அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்' என்னும் பாடலடி காட்டுகின்றது' 8

என்று குறிப்பிடுகின்றார்.

மேலும் அவர்

சங்ககாலக் கல்விச்சூழல் பற்றி ஆராய்ந்த ராஜ்கௌதமன் என்பவரின்

'சங்ககாலக் கல்வி உயர்கல்விஇ சாஸ்திரக் கல்வி, குலம்சார் கல்வி எனும் முந்நிலைகளில் இருந்ததைக் காட்டியுள்ளார்'9

கூற்றினை எடுத்துக் காட்டி குறிப்பிடுகின்றார்.

இதனடிப்படையில் அக்கால நிலையினை அறிந்து கொள்ள முடிகின்றது.

முடிவுரை

இவ்வாறாக தமிழரின் பண்பாடுகளில் புலவர்கள் மற்றும் அரசர்களின் செயல்பாடுகள் சிறந்த பண்பாடுகளாக மேற்காணும் பாடல்களில் இருந்து பெறப்படுகின்றது. அக்காலப் புலவர்கள் பரந்த மனப்பான்மையுடையவர்களாகவும், தன்மானவுணர்வுடையவர்களாகவும், மன்னர்களுக்கு அறிவுரை கூறுபவர்களாகவும், சிறந்த நட்பினைக் கொண்டவர்களாகவும் இருந்துள்ளனர் என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது. இருப்பினும் கோப்பெருஞ்சோழன்-பிசிராந்தையார் ஆகியோரது நட்பு புறநானூறு வழி அறிந்து கொள்ளும் போது அறியாமலேயே நட்பு கொண்டதாகக் குறிக்கப்படுகின்றது. இது ஆய்வுக்குரிய ஒன்று. அதே போன்று பெருஞ்சித்தரனார் இளவெளிமானின் செயல்பாடுகளினால் வெறுப்புற்று, அவனுக்கு அறிவுரை கூறுவதும் ஆய்வுக்குரிய ஒன்று. இது போன்ற பல்வேறு பாடல்கள் ஆய்வுக்கு உட்படுத்தும் பொழுது இன்னும் அதிகமான தகவல்கள் கிடைக்கக் கூடும் என்பதில் ஐயமில்லை.

அடிக்குறிப்புகள்

1. ஞா. தேவநேயப் பாவாணர் பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும் பக்.166-167
2. அ.தட்ஷிணாமு{ர்த்திதமிழர்நாகரிகமும்பண்பாடும் பக். 195
3. மா.இலாசமாணிக்கனார் தமிழக வரலாறும் பண்பாடும் பக்.410
4. புறநானூறு பக்.59
5. புறநானூறு பக்.26
6. மேலது பக்.26
7. மேலது பக்.31
8. பெ. மாதையன் தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் காலமும் கருத்தும் பக். 157
9. மேலது பக். 157

துணைநூற்பட்டியல்

1.இராசமாணிக்கனார் மா
தமிழக வரலாறும் பண்பாடும்,
5ம் பதிப்பு ஆகஸ்ட் 2020,
சாரதா பதிப்பகம்,
ராயப்பேட்டை
சென்னை – 600014

2.தட்ஷிணாமு{ர்த்தி அ
தமிழர் நாகரிகமும் பண்பாடும்,
திருத்திய மறுபதிப்பு ஏப்ரல் 2021,
ஐந்திணைப் பதிப்பகம்,

மு{ன்றாவது தெரு,
மேற்கு அண்ணா நகர்,
சென்னை – 600040
3.புறநானூறு
முலமும் உரையும்
முனைவர் இர.பிரபாகரன்
மேரிலாந்து அமெரிக்கா,
முதல் பதிப்ப டிசம்பர் 2011
காவ்யா
16, இரண்டாம் குறுக்குத் தெரு,
டிரஸ்ட்புரம்,
கோடம்பாக்கம்,
சென்னை 24

4.புறநானூறு
மு{லமும் தெளிவுரையும் பாகம் 2,
பதிப்பாசிரியர் லேனா தமிழ்வாணன்,
முதற்பதிப்பு 1957,
மணிமேகலைப் பிரசுரம்,
தியாகராய நகர்,
சென்னை – 600017
5. ஞா. தேவநேயப் பாவாணர்
பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும்,
இரண்டாம் பதிப்பு 2018,
நாம் தமிழர் பதிப்பகம்,
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை-5
6. பெ. மாதையன்
தமிழ்ச் செவ்விலக்கியங்கள் காலமும் கருத்தும்,
முதற்பதிப்ப ஜீலை 2011,
நியூ செஞ்சூரி புக் சென்டர்,
41 பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர்,
சென்னை 98

********* ********* ********** ********* ********* ********** ********** **********